DUPLICATE

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிஸூ (1889)
ஆவணிமீ ௨௨௳
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப்பட்டினம்: வருஷத்துக்கு ரூ. ௨-௫0
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௪-௫0.
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. ௪-௫0.
தனிப்பிரதி சதம் ௬.
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. ௬-௪0.
,, அரைக்கலம் ரூ. ௩-00
,, கால்கலம் ரூ. ௧-௭௫
,, ஒரு அங்குலம் -௭௫
அடுத்தமுறைகட்கு ஷை விகிதம் வீதம் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றி சுகனிக்கப்படா.

புத்தகம் ௩௨. } யாழ்ப்பாணம்:—ரௌத்திரிஸூ ஆனிமீ ௩௨௳; ௧௯௨0-ம்ஆ ஜூலைமீ ௧௫௳. { இலக்கம்—௫

௨
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சைதொழிலெனமூன்று
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாராற்
பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ரூ. ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	௧0
இரண்டாம் பாலபாடம்	௧௫
மூன்றாம் பாலபாடம்	௨0
நான்காம் பாலபாடம்	௩0
ஐந்தாம் பாலபாடம்	௪0
ஆறாம் பாலபாடம்	௫0
கலாமஞ்சரி [விளக்கத்துடன்] (இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கிலஸ்கூல் லீவிங்சேர்ட்டிவிக்கற்" வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது)...	௭௫
கலாமஞ்சரிவிளக்கம் (மாத்திரம்)	௩0
ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன்	௪
நமச்சிவாயமாலை, உரையுடன்	௪
வெற்றிவேற்கையுரை	௪
வாக்குண்டாமூதுரை	௪
நல்வழியுரை	௪
நன்னெறியுரை	௪
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)	௧௨
இலக்கண வினாவிடை...	௧0
நிகண்டு ௧௧-வதும ௧௨-வதும்	௨௫
திருவாதவூரடிகள்புராண மூலம்... ...	௨௫
திருட்டினன்றூது மூலமுமுரையும்... ...	௫0
திருச்செந்தூர்ப்புராணவுரை (கிளேஸ்காகிதம்) ரூ.௧-௨௫,(நல்காகிதம்)	௧-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் ...	௧0
கந்தசஷ்டி கவசம்	௫
சுப்பிரமணியசுவாமி விருத்தம்	௫
ஆறுமுகசுவாமி விருத்தம	௫
கதிரைமலைப் பேரின்பக்காதல்	௧0
பிள்ளையார்கதை	௧௨
பிரபஞ்சப் பெருவழக்கு	௧0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ...	௧0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) ...	௮
குமணசரித்திரம் ,, ...	௪
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௩
சோமவாரவிரதமான்மியம்	௧0

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை கிரயமின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

சாலாமிஸ்ரி லேகியம்.

I.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாசித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீமுள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், லங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக வகைமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை இறாத்தலுக்கு ரூபா ௧0. கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

ச. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல 91 முதல் மருதானை, கொழும்பு.

பேசல்மிசன் ஓடுகள்.

உலகப்பிரசித்தியான இவ் ஓடுகள் புதிதாய் தருவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓடுகள் குறைநிசயங்களை நன்குணர்ந்தவர்களாயுள்ளவர்களால மற்றைய ஓடுகளிலும் திறமான வையெனக் காணப்பட்டிருக்கின்றன. தட்டோடுகள், முகட்டோடுகள், அரையோடுகள், காற்றோடுகள், தளவரிசைக்கற்கள் முதலியன இப்போது இருப்பிலிருக்கின்றன.

William Mather & Sons,
Agents
Basel Missien,
Tile Works

8

சுருட்டுவியாபார விளம்பரம்.

M. 1.

1920-ம் வருஷம் ஆடிமீ 5௳ திங்கட்கிழமை சுருட்டு வர்த்தகர்கள் கூடிய ஐக்கிய மகா சங்கத்தில் புகையிலை விலையேற்றத்தின் காரணமாக இந்தமாசம் 16௳ வெள்ளிக்கிழமைக்குச் சரியான ரௌத்திரிஸூ ஆடிமீ ௧௳ தொடக்கம் இதன் கீழ்க் காணும் விலைகளுக்குச் சுருட்டுகள் விற்கப்படுமென்பதைச் சகலருக்கும் அறியப் படுத்துகிறோம்.

			ரூ.-ச.
சின்னச் சுருட்டு வியாபாரிகளுக்		1000	5-00
பணச்சுட்டு	,,	1000	7-00
சின்னப் பணம்	,,	1000	7-00
பெரிய வெள்ளை	,,	1000	7-00
வைடமன்	,,	1000	9-00
கொறனேஷன்	,,	1000	9-00
சட்டைக் கொறனே.	,,	1000	9-00
விக்ரோறியா	,,	1000	12-00
இரண்டரைப்பென்னி	,,	1000	15-00

சங்கத்தார் சட்டவைப்படி.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

(Q. 1.)

நாணயமான ஜவுளிதினிசுகள் கிடைக்கும்.
இந்தியர்களுக்கும் மகமதியர்களுக்கும் தேவையான மாதிரி ஜவுளிகள் கிடைக்கும்.
வியாபாரிகளுக்கும் சகாயமாய்க் கிடைக்கும்.
எல்லாரும் வி. பி. யில் வாங்கலாம்.

இந்தியா, பர்மா, சிலோன், சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா, மலாய்நாடு, ஆபிரிக்கா, நெட்டால், டிரான்ஸ்வால், பிஜிதீவு முதலிய தேசங்களுக்கு ஜவுளிதினிசுகள் அனுப்பும்

தனலட்சுமி சுதேசி ஜவுளி மளிகை,
அம்மன் சன்னிதி தெரு,
மதுரை, தென் இந்தியா.

தந்தி விலாசம்;
"MURAHARI"
MADURA.

கலாமஞ்சரி.

இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிக்கற்" வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப் பாடமாக உபயோகமாகும்வண்ண மியற்றியது. விளக்கத்துடன் விலை சதம் ௭௫.

கலாமஞ்சரிவிளக்கம் மாத்திரம் விலை சதம் ௩0.

இவ்விளக்கத்தில் கலாமஞ்சரியிலுள்ள வசனபாகத்திற்கு அரும்பதவுரை முதலியனவும், செய்யுட்பாகத்திற்குப் பதவுரை, விருத்தியுரை, இலக்கணக்குறிப்பு முதலியனவும் நன்கு எழுதப்பெற்றுள்ளன.

பிரதிகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன.

வைத்தியகந்தோர்ப்பகுதி ஒப்பந்தக் கடுதாசிகள்.

G. 7.

மஸ்கேலியா, மொறொட்டுவா, நயபோடை, கரவணலை, கெர்தன்கமுவா, முதலிய இடங்களிலுள்ள கவண்மேந்து ஆஸ்பத்திரிகளுக்கு 1920-ம் ஆண்டு ஒக்டோபர்மீ முதலாந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்துக்கு தின சாமான்கள் கொடுப்பதற்கு, ஒப்பந்தக் கடுதாசிகள் அனுப்பவேண்டிய முறையாவது.

ஒப்பந்தங்கள் எழுதிக்கொடுக்கும் கடுதாசிகள் கொழும்பு பிரதான சிவில்மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தக்கடுதாசிகள் 1920-ம் ஆண்டு ஜூலாய் மாதம் 27௳ மத்தியானம் 12 - மணிக்கு முன்பு, ஒப்பந்தக் கந்தோர்த் தலைவருடைய கந்தோரில் கிடைக்கப்படவேண்டும். அப்படிக் கிடைக்காத கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இன்னும் வேண்டிய விபரங்களுக்கு கவண்மேந்து கசற்பத்திரிகையைப்பார்க்கவும் அல்லது பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசருக்கு எழுதி அறியவும்.

புதிய கையொப்ப நேயர்கள்

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம்,
"இந்துசாதன" மானேசர்.

"ஓடர்நைசி" என்னும் கட்டளைப்பத்திரம்.

சுதுமலை டிஸ்த்திறிக்கோட்டிலே.

சுதுமலையிலிருந்து காலஞ்சென்றுபோன சு. ப. ஆ. ஆவிடையப்பனுடைய மரணசாதனத்தைப்பற்றிய காரியம்.

1. சுதுமலை மு. செல்லக்குட்டி,
2. கொழும்பு செட்டித்தெருவில் 192-ம் நம். வ. இ. சின்னையா
விண்ணப்பக்காரர்.

1. முத்து கருப்பன் தேவருடையமகன்
சொர்னம்
,, சின்னம்மா
உத்தரவாதிகள்.

உரிமைத்தத்துவ வழக்கு.
இல. B 624.

சுதுமலை டிஸ்திறிக்கோட்டு நீதிவானாகிய கனம் தொமஸ் வெப்ற பட்லஸ் துரைகள் முன்பாக 1920-ம் ஆண்டு ஆனிமீ 25-ந் தேதி இந்தக் காரியம் கொண்டுவரப்பட்டு விண்ணப்பக்காரருடைய தரணியாகிய வெல்கம்பொட்கர் துரைகள் முகதாவில் மேற்படி விண்ணப்பக்காரருடைய உறுதிப்படுத்திய நொத்தாரிஸ் சாட்சிக்காரருடைய சத்தியப் பத்திரத்தை வாசிக்கப்பட்டுப் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

அதாவது தற்போது கோட்டுக்குக் கொண்டுவரப்பட்டு கோட்டில் வைத்திருக்கும் மூலப்பிரதியாகிய காலஞ்சென்றுபோன சு.ப.ஆ. ஆவிடையப்பனுடைய மரணசாதனம் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

1920-ம் ஆண்டு ஆவணிமீ 11-ந் தேதி அல்லது முன் மேலேசொல்லப்பட்ட உத்தரவாதிகள் அல்லது வேறெவராவது இத்தத்தீர்ப்புக்கு எதிரிடையாகப் போதிய காரணம் இக்கோட்டுக்குக் காண்பிக்கத்தவறினால் மேற்சொல்லிய மரணசாதனத்தின் காரியகாரனாகிய சுதுமலை மு.செல்லகுட்டிக்கும் கொழும்பு 192-ம் நம். செட்டித்தெருவில் வ. இ. சின்னையாவுக்கும் புறபேட் என்னும் தத்துவம் கொடுக்கப்படும்.

(ஒப்பமிட்டது.)
டீ. டபிள்யு. றபட்ஸ்,
டிஸ்திறிக் நீதவான்.

1920-ம்ஆ ஆனிமீ 25-ந்௳.

அட்டபந்தன மருந்து.

112

அஷ்டபந்தன மருந்து இந்தியாவிலிருந்து நல்ல முதல்தரச் சரக்காக அழைப்பித்துச் சுத்தமாகச் செய்த மருந்து என்னிடம் விலைக்கு இருக்கின்றது. வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

சு. வைத்தியநாதக் குருக்கள்,
சிவன்கோவில் வடக்குவீதி,
வண்ணார்பண்ணை.

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: ரௌத்திரி ௵ ஆனி ௴ கூஉ

அருட்பாக்களுக்கு அர்த்தஞ்சொல்லல் உரையெழுதல்.

தேவாரம் திருவாசகம் என்னுமிவைகள் அருட்பாக்களென்றும் தமிழ்வேதமென்றுஞ் சொல்லப்படும். இவைகள் சிவஞானச் செல்வர்களாகிய சமயகுரவரால் அருளிச்செய்யப்பெற்றமையின் மந்திர மொழிகளென அறிவாளிகளால் மதித்துப் பாராட்டப்படலாயின. இவ்வருட்பாக்களை மெய்யன்போடு பாராயணஞ் செய்வோர் திருவருள் சித்திக்கப் பெறுவரென்பது பெரியோர் கொள்கை. சிவாநுபூதிச்செல்வர்களன்றி ஏனையோர் இவ்வருட்பாக்களின் ஞானார்த்தங்களை உள்ளபடி யுணருதல் இயலாதாகுமென்னுங் கருத்துப் பற்றியே முன்னிருந்த பரிமேலழகர் நச்சினார்க்கினியர் முதலாந் தொல்லாசிரியர்கள் இத்தமிழ் வேதங்கட்கு உரையெழுதத் துணிந்திலரெனலாம். மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருக்கோவையாருக்கு உரையெழுதிய பேராசிரியர்தாமும் திருவாசகத்திற்கு உரையெழுதத் துணிந்தாரல்லர். இதுவும் மேற்காட்டிய நியாயத்திற்குத் தக்க சான்றெனலாம். திராவிடமாபாடிய மெழுதிய மாதவச் சிவஞானயோகிகளும் தேவார திருவாசகங்கட்கு உரையியற்றத் துணிந்திலர். பிற்காலத்திருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் போன்ற மகான்களும் தேவார திருவாசகங்கட்கு அர்த்தஞ் சொல்லவேனும் உரையியற்றவேனும் முன்வந்திலர். இவர்களெல்லாம் இங்ஙனஞ் செய்யாதொழிந்த காரணம் சிவாநுபூதிச் செல்வர்கள் திருவாய்மலர்ந்தருளிய அருட்பாக்கட்கு அர்த்தஞ் சொல்ல முயன்று விபரீதார்த்தங் கொண்டு மீளா நரகிற்கு ஆளாகவேண்டி நேரிடுமென வஞ்சியேயாம்.

இங்ஙனமெல்லாமிருப்பவும் இக்காலத்திற் சிலர் நவீனநாகரிகத் தலைப்பட்டமையினாலோ அன்றேல் போலிப் புகழை விரும்பியோ அறியேம், கொஞ்சமுங் கூசாது அருட்பாக்கட்கு அர்த்தஞ் சொல்லவும் விருத்தியுரை யியற்றவும் அந்நியபாஷையில் மொழிபெயர்க்கவுந் துணிந்து விபரீதார்த்தங் கொண்டு தம்மையும் அற்ப கல்வியுடைய பிறரையும் இம்மையிற் கெடுத்து மறுமையில் நரகிற்குமாளாகும் மார்க்கத்தைத் தேடலாயினர். கற்கின்றவற்றை, அன்றேல் பாராயணஞ் செய்பவற்றை விளங்கியன்றிக் கற்கவொண்ணாது, பாராயணஞ்செய்யவொண்ணாது என்பது இவர்களபிப்பிராயம். கற்கின்றவற்றை விளங்கிக் கற்றலும், பாராயணஞ்செய்பவற்றை விளங்கிப் பாராயணஞ்செய்தலும் நன்றன்றென யாஞ் சொல்ல வரவில்லை. மந்திரமொழிகளாயுள்ள தேவார திருவாசக விஷயத்திலும் இம்முறையை அநுசரித்தல் யுக்தமாகுமோவென்பது ஆட்சேபத்திற்கிடமாம். பேதி மருந்து அதன் குணத்தை விளங்கியுண்டோர்க்கன்றி விளங்காமலுண்ணுஞ் சிறு குழந்தைக்குந் தான் செய்யவேண்டிய தொழிலைச் செய்யும். அஃதேபோல் இம்மந்திர மொழிகளும் விளங்கினுலுஞ்சரி விளங்காவிட்டாலுஞ் சரியே, மெய்யன்போடு ஓதுவார்க்குப் பயன் செய்தேதீரும். இவை உண்மையென நம்பினோர்க்கு நன்மை பயக்கும் பான்மையன.

> 'மந்திரமுந் தேவும் மருந்துங் குருவருளுந்
> தந்திரமுஞ் ஞானந் தருமுறையும்-யந்திரமுஞ்
> செய்யென்னின் மெய்யாய் விளங்குமே மேதி
> னியிற், பொய்யென்னிற் பொய்யாகிப் போம்''

என்றார் பெரியோரும். இறைவனருள் பெற்ற ஞானாசாரியர் வாயிலாக இத்தேவார திருவாசகங்களின் தத்துவார்த்தங்களை யுணருவதன்றி, யாப்பற்ற இலக்கண இலக்கிய அறிவைக்கொண்டு இவற்றை உள்ளபடி உணர முயலுதல், நரியின் வாற்கொண்டு கடலாழம்பார்க்க முயல்வதொக்கும்.

சிலர், ஒன்றும் விளங்காமல் இவற்றை ஓதுவதைக் காட்டிலும் சொற்பம் விளங்கிக்கொண்டு ஓதுவது நன்றன்றோ வென்பர். பூரணமாக விளங்கினாலன்றிச் சொற்பவிளக்கந் தீமைக்கேதுவாகும். மந்திரமொழிகள்போல் இத்தேவார திருவாசகங்களும் நாதமாத்திரையானே பயன்றரும்பான்மையன வாதலால் இவற்றைப் பிழைபாற லோதினாலே அமையுமெனப் பெரியோர் சொல்லியிருக்கின்றனர். திருக்குறளும் தேவார திருவாசகங்களும் திருமூலர் திருமந்திரமும் ஓரே தன்மையான தத்துவார்த்தத்தைப் பிரதிபாதிக்கும் மேலான நூல்களாகுமென்னுங் கருத்துப் போதர ஒளவைபிராட்டியாரும்

> 'தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
> மொருவா சகமென் றுணர்''

எனக் கூறிப் போந்தனர். மேற்குறித்த நூல்களுக்கு முற்காலத்துள்ள வித்துவான் எளிதில் உரை கண்டிருப்பரேல் தெய்வப்புலமை ஒளவைப்பிராட்டியார், தேவர்குறள் முதலியன இத்தன்மையன வென்னுமிரகசியத்தை இவ்வெண்பா வாயிலாகச் சொல்ல முன்வந்திருக்கமாட்டார், நமது வித்துவான்கள் இந்நூல்களைப் பேதமாகநினைத்து விபரீதார்த்தங் கொண்டு இடர்ப்படுவரென் றுன்னியே ஒளவையார் அவ்விரகசியத்தை முன்னர்ச் சொல்லிப் போந்தனர்.

இக்காலத்துள்ள வித்துவான்கள் தமது கல்வித்திறத்தை உலகோருக்குக் காட்டவேண்டுமென விரும்பினால், அன்றேல் உலோகோபகாரமாக உரை நூல்களை இயற்றவேண்டுமென விரும்பினால், இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களுட் பெரும்பாகங்களும், கந்தபுராணம் முதலிய புராணங்களுட் பெரும் பாகங்களும் உரையின்றியுள்ளன. அவற்றிற்கு உரை யியற்றின் அது உலோகோபகாரமாவது மாத்திரமன்றி, செய்தார்க்குப் பெரும் புகழையும் பயனையுமுதவும். அங்ஙனமின்றி ஏலாதனசெய்யத் தலைப்பட்டு "உடுக்கையு முடைத்தானே பிழைப்பையுங் கெடுத்தானே" என்றபிரகாரம், தமக்கும் பிறர்க்கும் இடரைத்தரும் விஷயங்களுட் பிரவேசித்தல் புத்தியாகா.

எதனையும் விளங்கித்தான் படித்தல் வேண்டுமென்பது மேலைத் தேசத்தார் கொள்கை. அம்மேலைத்தேசத்தார்க்குரிய பாஷையில் மந்திரமொழிகளில்லாமையினால் அவர்கள் அங்ஙனங் கூறுவர். ஒரு சமயத்தார் கொள்கை இன்னொரு சமயத்தார் கொள்கைக்கும், ஒரு சாதியார் கொள்கை இன்னொரு சாதியார் கொள்கைக்கும் பெரும்பான்மையும் ஒத்திரா. உப்புப்பொதி சுமந்துசென்ற கழுதை ஆற்றில் முழுகியதினாற் பாரங் குறையப் பெற்றதெனநினைத்துக் கம்பலப்பொதி சுமந்துசென்ற கழுதையும் அங்ஙனஞ் செய்யத் துணிதல் யுக்தமாகா.

நீதிபோதம். உகூ.

சோமேசர் முதுமொழி வெண்பா.

வாய்மை.

பிள்ளையுட னுண்ணப் பேசியழைத் தாரன்பு, தள்ளு சிறுத்தொண்டர் சோமேசர்—உள்ளுங்கால், "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்."

ப-ரை: அன்பு தள்ளு சிறுத்தொண்டர்-மெய்பத்தி மிகுஞ் சிறுத்தொண்டநாயனார், பிள்ளை உடன் உண்ண-தமது புத்திரனாகிய சீராளதேவன் வைரவமூர்த்தியுடன் இருந்து போசனஞ் செய்வதற்கு, பேசி அழைத்தார்-சொல்லிக் கூப்பிட்டார், சோமேசா-சோமேசரே, உள்ளுங்கால்-ஆராயுமிடத்து, பொய்ம்மையும்-பொய்ம்மைச் சொற்களும், புரைதீர்ந்தநன்மை பயக்கும் எனின்-குற்றத்தினின்றும் நீங்கிய நன்மையைப் (பிறருக்குத்) தருமாயின், வாய்மை இடத்த-மெய்ம்மைச்சொற்களினிடத்தனவாம். எ-று.

க-ரை: திருவமுது செய்யப்புகும் வைரவர் சிறுத்தொண்டரை "உடனிருந்துண்பதற்கு உன் சிறுவனை யழை" யெனப் பணித்தருள சிறுவன் கறியாக அட்டுப்படைக்கப்பெற்றானென்பதை கூறாது வைரவரைத் திருவமுது செய்விக்க வேண்டுமென்னும் ஆசையினால் "அவன் இப்பொழுதுதவான்" எனவும் வைரவர் அவன் வந்தாலன்றி உண்ணேன் தேடியழையுமென அங்ஙனஞ் செய்தார். ஆதலின் குற்றமற்ற நன்மையைத் தருமாயின் பொய்ம்மொழியும் மெய்க்குச் சமமாமென்பது கருத்து.

வி-ரை: இங்கே பொய்ம்மை சிறுத்தொண்டநாயனார் பிள்ளையிறந்தமையை வைரவருக்குக் கூறாமை, வைரவரைத் திருவமுது செய்விக்க வேண்டி மறைத்தமையால் அப்பொய்ம்மை நன்மை பயப்பதாய் வாய்மையிடத்ததாயிற்று. நன்மையைத்தரும் பொய்ம்மை வாய்மையாதல்போல தீமையைத்தரும் வாய்மையும் பொய்ம்மையாகுமெனவறிக. என்னை! "வாய்மையெனப்படுவதியாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்" ஆகலின்,

சிறுத்தொண்டர் பிள்ளையுடனுண்ணப் பேசியழைத்த வரலாறு.

வைரவர் விருப்பப்பிரகாரம் திருவெண்காட்டு நங்கையார் பக்குவஞ்செய்தபின்னர் அவர் நாயகராகிய சிறுத்தொண்டநாயனார் பெருமகிழ்வுடையராகி, விரைந்து சென்று, திருவாத்தியின் கீழ் இருந்த வைரவரை வணங்கி, "சுவாமீ! தேவரீர் பிரீதிப்படி பாகம்பண்ணுவித்தேன். எழுந்தருளிவந்து திருவமுது செய்தருளல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்து, அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், ஆசனத்திலிருத்தி, அவருடைய திருவடிகளை ஜலத்தினால் விளக்கி, அந்தத் தீர்த்தத்தைத் தமது சிரசின்மேலே தெளித்து, வீடெங்கும் புரோக்ஷித்து, அவரைப் புஷ்பத்தினால் அருச்சித்துத் தூபதீபங்காட்டி வணங்கினர். வணங்கிய பின், நாயனாரும் மனைவியாரும் வைரவரை நோக்கி, "சுவாமீ! திருவமுது படைக்கும்வகை எப்படி" என்று கேட்க வைரவர் அன்னத்துடன் கறிகளெல்லாம் ஒருங்கே படைக்கவேண்டும்" என்றார். மனைவியாராகிய திருவெண்காட்டு நங்கையார் பரிகலந்திருத்தி, அன்னமுங் கறியமுதும் படைத்தார். வைரவர் அதைப்பார்த்து, "நாஞ் சொல்லியமுறையே கொன்ற பசுவினது உறுப்புக்களெல்லாவற்றையும் பாகம் பண்ணினீரா? என்று, வினவ; திருவெண்காட்டு நங்கையார் "தலையிறைச்சிமாத்திரம் திருவமுதுக்கு ஆகாதென்று கழித்துவிட்டோம்" என்றார். வைரவர் "அதுவும் நாம் உண்பது" என்றார். அது கேட்டுச் சிறுத்தொண்டநாயனார் மனைவியாரோடு திகைத்து அயர; சந்தன நங்கையார் "நான் அத்தலையிறைச்சியை அடியவர் திருவமுது செய்யும்பொழுது நினைக்கவருமென்று முன்னமே பாகம்பண்ணிவைத்தேன்" என்று சொல்லி எடுத்துக்கொடுக்க; திருவெண்காட்டு நங்கையார் முகமலர்ந்து, வாங்கிப் படைத்தார். அதன்பின் வைரவர் சிறுத்தொண்டநாயனாரை நோக்கி, "நாந்தனியே உண்ணோம். சிவனடியார்களைக் கொண்டுவாரும்" என்று அருளிச்செய்ய, சிறுத்தொண்டநாயனார் ஏங்கி, "ஐயோ! அடியவர் திருவமுது செய்வதற்கு இடையூறு இதுவோ" என்று நினைந்து, வீட்டுக்குப் புறத்திலே போய், சிவனடியார்களைத் தேடிக் காணாது, துக்கத்தோடு திரும்பிவந்து, வைரவரை வணங்கி, "சுவாமீ! சிவனடியார்களைக் காணேன். அடியேனும் திருநீறிடுவோரைக் கண்டு அங்ஙனஞ்செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்ய; வைரவர் சிறுத்தொண்டநாயனாரை நோக்கி, உம்மைப்போலத் திருநீறிட்டாருளரோ? நீர் இருந்து உண்ணும்" என்று சொல்லி, பின் திருவெண்காட்டு நங்கையாரை நோக்கி, "இவருக்கு வேறொரு பரிகலந்திருத்தி அன்னமும் இறைச்சியும் நமக்குப் படைத்ததில் எடுத்துப்படையும்" என்று அருளிச்செய்ய; அவரும் அப்படியே எடுத்துப் படைத்தார். சிறுத்தொண்டநாயனார் வைரவரை ஊட்டவேண்டி, உண்ணப்புகுதலும்; வைரவர் தடுத்தருளி, "ஆறு மாசத்துக்கு ஒருமுறை உண்ணுகின்ற நாம் உண்ணுமளவும் தரியாமல், எப்பொழுதும் உண்ணுகிற நீர் முன் உண்பது என்னை? நம்முடன் உண்ணும்பொருட்டு உமக்குப் புத்திரன் உண்டேல் அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் "இப்போது அவன் உதவான்" என்று சொல்ல; வைரவர் "அவன் வந்தாற்றான் நாம் உண்போம். தேடி அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் தரியாது எழுந்து, மனைவியாரோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலே போய் "புதல்வனே! வா" என்று அழைக்க; மனைவியாரும் நாயகரது பணியில் நிற்பாராகி, சீராளனே! சிவனடியார் அடியேங்கள் உய்யும்பொருட்டு உடனுண்ண உன்னை அழைக்கிறார் வா" என்று அழைத்தார். அப்பொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினாலே பள்ளிக்கூடத்தினின்றும் ஓடிவருபவர்போல வந்தார். தாயார் அவரை எடுத்துத் தழுவி நாயகர் கையிற்கொடுக்க; அவர் "இனிச் சிவனடியார் திருவமுது செய்யப்பெற்றோம்" என்று மனமகிழ்ந்து, அப்புதல்வரை விரைவிற்கொண்டு அடியவரைத் திருவமுது செய்வித்தற்கு உள்ளே வந்தார். அதற்குமுன் வைரவர் மறைந்தருள; சிறுத்தொண்டநாயனார் அவரைக் காணாமையால் மனங் கலங்கித் திகைத்து விழுந்தார். கலத்திலே இறைச்சிக்கறியமுதைக் காணாமையால் அச்சமுற்றார். "வைரவர் அடியேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனரோ" என்று தேடி மயக்கங்கொண்டு, புறத்திற்செல்ல; அச்சிறுத்தொண்டநாயனார் செய்தது நிஷித்தானுட்டானமாயினும், அவர் சிவானந்தானுபவமே விட்டு நிற்கையால் கருவிகரணங்கள் தற்போதச் சிவிப்பாய் நின்று செய்யாது சிவபோதச்சிவிப்பாய் எழுந்து செய்தமைபற்றி அதனை விதியானுட்டானமாகவே கொண்டருளிய சிவபெருமான் அரிபிரமேந்திராதி தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் சேவிக்க, உமாதேவியாரோடும் சுப்பிரமணியசுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினார். சிறுத்தொண்டநாயனாரும் மனைவியாரும் புதல்வரும் தாதியாருமாகிய நால்வரும் அவர்களைத் தரிசித்து, ஆனந்தவருவி சொரிய, எலும்பும் மனமும் நெக்குநெக்குருக பரவசர்களாய் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்று, தோத்திரம்பண்ணினார்கள். பின்பு பரமசிவனும் பார்வதியம்மையாரும் சுப்பிரமணியசுவாமியும், அவர்கள் நால்வரையும், தம்மை எக்காலமும் பிரியாது வணங்கிப் பேரின்பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும் பொருட்டு, உடன்கொண்டு திருக்கைலாசத்தை அடைந்தார்கள்.

சமாசாரம்

காலநிலை:—சென்ற சில மாசங்களாக மழையில்லாமையால் உஷ்ணமதிகமாயிருக்கின்றது. இடையிடையே இன்புளூவென்சா வென்னும் மூன்றநாட்சுரம் தோற்றியிருக்கின்றது.

தேவி உற்சவம்:—வண் வைத்தீஸ்வரர் கோயில், நல்லூர் நல்லைநாதசுவாமிகோயில், அராலிச் சிவன்கோயில், புலோலிப் பசுபதீஸ்வரன் கோயில், வல்லை வைத்தீஸ்வரன் கோயில் ஆதியாஞ் சிவாலயங்களில் சென்ற சனிவாரத்தன்று தேவி உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. வருகிற ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவமும், ஆடிப்பூர புண்ணியதினமாகிய திங்கட்கிழமையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

கும்பாபிஷேகம்:—யாம் முன்னர் தெரிவித்தபடி சுதுமலை புவனேஸ்வரியம்மைகோயிற் கும்பாபிஷேகம் சென்ற வியாழக்கிழமை காலை வெகு சிறப்பாக நடைபெற்றது. சைவாபிமானிகள் எண்ணிறந்தோர் அத்தருணத்தில் கும்பாபிஷேக தரிசனத்தின் பொருட்டுச் சமுகமாயிருந்தனர். அன்று தொடக்கம் விசேஷ அபிஷேகமும் அலங்கார உற்சவமும் நடைபெறுகின்றன. வைத்தியர் ஸ்ரீ முத்துக்குமாரு அவர்களும் நொத்தாரிசு ஸ்ரீ ஆறுமுகமவர்களும் செய்த பதிபுண்ணியம் எவரும்பாராட்டத்தக்கன.

கமச் செய்கை:—மின்னேரிக்குளத்தையடுத்த நிலங்களிற் கமஞ்செய்ய ஏற்பட்ட கம்பனியார் நிலங்களை ஆட்சிப்பண்ணி கமச்செய்கை வேலை ஆரம்பித்திருக்கின்றனர். கூலிச்சனங்கள் வசித்தற்கு இடங்கடோறும் வீடுகள் கட்டப்படுகின்றனவாம்.

கூலிச்சனங்கட்குப் புகைரதப்பிரயாணக் கிரயம்:—இலங்கையில் ஆரம்பித்திருக்குங் கமங்களில் கூலிவேலை செய்யும்படி இடங்கள்தோறும் புகைவண்டிமார்க்கமாகச் செல்லுங் கூலிச்சனங்கட்கு புகைரதக் கிரயத்தைக் குறைத்துவிடும்படி அரசினர் நோக்கங்கொண்டிருக்கின்றனர்.

அலியன்யானை:—பூநகரிப்பகுதியில் ஒரு அலியன் யானை புகுந்து மூன்று பேரை யடித்துக் கொன்றுவிட்டு அகப்படாமல்திரிகின்றமையால் அந்த யானையைக் கொல்லும்படி அரசினர் அனுமதி கொடுத்திருக்கின்றனர். ஒருவன் அந்த யானையை அகப்படுத்தி விட்டானென்றுவதந்தி பிறக்கின்றது.

சுப்பிறீங்கோடு:—நான்காவதாக, கரவெட்டி மகவாதுவழக்கு சென்ற வியாழன் வெள்ளி இரண்டு தினங்களாக விசாரிக்கப்பட்டது. இவ்வழக்கில் முதலாமெதிரி ஒரு கன்னிகையைக் களவாண்டு அவள்கற்பைக்கெடுத்ததாகவும் இரண்டாம் மூன்றாம் நாலாமெதிரிகள் முதலாமெதிரிக்குத் துணைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். முதலாமெதிரி ஐந்துவருடக்கடுங்காவல் பெற ஏனையஎதிரிகள் விடுதலையாயினர்.

விவாகம்:—ஆனைக்கோட்டை கூழாவடிப் பிரபல வர்த்தகர் ஸ்ரீ. ச. தம்பு அவர்களின் சிரேஷ்ட புத்திரன் தியாகராசபிள்ளை அவர்கட்கும், அச்சுவேலி வாசர் ஸ்ரீ. கா. கந்தையாபிள்ளையவர்களின் மூன்றாம் புத்திரி ஸ்ரீமதி. தங்கரத்தின அம்மாளுக்கும், சென்ற புதவாரத்தன்று நிகழ்ந்த சுபகாலத்தில் விவாகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் சகல இன்பங்களையும் அநுபவித்து இனிது வாழத் திருவருள் முன்னிற்பதாக. கடித.

வடமாகாண உணவுப் பொருள் அபிவிருத்திச் சங்கம்:—மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று வருகிற 1920-ம் ௵ ஆடி ௴ 17-ந் தேதி சனிக்கிழமை சாயந்தரம் 4½-மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கௌரவஸ்ரீ. பொ. ராமநாதனவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் நடைபெறும். கூட்டத்தின் நோக்கங்களாவன: 1. நிருவாகசபையாரால் நிர்ணயிக்கப்பட்ட பிரமாணங்களை அங்கீகரித்தல். 2. அங்கத்தவராய் வர விரும்புவோரைப் பதிவுசெய்தல். 3. சபையின் உத்தியோகத்தரைத் தெரிவுசெய்தல். 4. வடமாகாணத்தின் பற்பல இடங்களுக்கும் கிளைகளாக சபைகளை ஸ்தாபித்தல். உணவுப்பொருள் விருத்தியிற் சிரத்தையுள்ளவர்கள் எவரும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்படுகிறார்கள். கடித.

உபாத்திமார் வேதனம்:—உபாத்திமார் தங்கள் குறைமுறையை வித்தியாகர்த்தருக்கு விண்ணப்பஞ்செய்து வேதன உயர்வைப் பெறுதற்கு வேண்டிய முயற்சிகள் செய்து வருகின்றனர். சென்ற ஜூலாய் ௴ 7-உ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் யாழ்ப்பாணஐக்கிய சங்கத்தின் நிருவாக சபை கூடி, உபாத்திமார் வேதனத்தை எவ்வளவென நிர்ணயிக்கவேண்டுமென்பதைக் குறித்து யோசித்தனர். இலங்கையிலுள்ள உபாத்திமார் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த ஜூலாய் மாசம் 19-உ வித்தியாகர்த்தாவர்களை இவ்விஷயமாகத் தரிசிப்பார்கள். யாழ்ப்பாணத்துள்ள உபாத்திமாரின் பிரதிநிதிகளாக மெஸ் செ. செல்லத்துரைப்பிள்ளை யவர்களும், மெஸ் J. V. செல்லையா அவர்களுஞ் செல்வார்கள். உபாத்திமார் வேதனத்தைக் குறித்து தற்கால வித்தியாதலைவராகிய மெஸ் A. S. ஹறிசனவர்கள் ஆங்கில வித்தியாசாலை அதிபர்களை தங்கள் அபிப்பிராயங்களைச்சொல்லும்படி கேட்டிருக்கின்றனர். உபாத்திமைத்தராதரப் பத்திரம்பெறாத உபாத்திமாருக்குக் கொடுக்கவேண்டிய வேதனமென்ன வென்பதையே வித்தியாகர்த்தர் விசேடமாக மனேஜர்மாரை உசாவியிருக்கின்றார்.

அறுவர் ஆழிவாய்ப்பட்டனர்:—கொழும்புக் கடலில் மீன்பிடிக்கச்சென்ற அறுவர் பெருங்காற்றிலகப்பட்டு ஆழிவாய்ப்பட்டு மாண்டுபோயினராம்.

ஜெனறல் டயர்:—பாஞ்சாலத்தில் சனங்களை நீதியீனமாகச்சுட்டு கொன்ற ஜெனறல்டயர் என்னுஞ்சேனாதிபதியை இனி எங்காயினும் உத்தியோகம் பார்க்கக் கூடாதென இங்கிலாந்தில் மேலதிகாரிகள் தடுத்திருக்கின்றனர்.

பழையஇராசகுடும்பத்தினர்:—ஆங்கிலருடன் சமர்புரிந்து தன் நாடுகளையிழந்த ஸ்ரீவிக்கிரமராசசிங்கனுடைய சந்ததியார் இப்பொழுதும் தென்னிந்தியாவிலுள்ள வேலூரில் வசிக்கின்றனர். அக்காலந்தொடக்கம் இன்று வரையில் இலங்கை அரசாங்கத்தினர் இவர்கட்கு உபகாரவேதனமுதவி வருகின்றார்கள். சில வாரங்கட்கு முன்னர் கௌரவ ஸ்ரீ. பொ. இராமநாதனவர்கள் சட்டநிருபணசபையில் மற்றையோர்க்குச் செய்வதுபோல இலங்கை அரசினர் இவர்களுக்குதவும் அரசினர் வேதனத்தையும் உயர்த்திக்கொடுத்தல் முறையல்லவோவெனக் கேட்டபோது அரசினர் உயர்த்திக்கொடுத்தற்கு உடன்பட்டனராம்.

நீர் விளையாடல்:—நீர்கொழும்பு பொலிஸ் நீதிபதியாயிருந்த மெண்டிஸ்குணதிலகவென்பவரும் அலவூர் பொலிஸ் தலைவரும் [illegible] ஜூலாய்மீ 4-ந்உ நீர்கொழும்புக் கடலில் ஸ்நானஞ்செய்தபோது பொலிஸ்நீதிபதி நீரோட்டத்திலகப்பட்டு ஆள்ளுண்டுபோகையில் அவதிப்படுதலைக் கண்ட பொலிஸ் தலைவர் ஆத்திரத்துடன் ஆளனங்களையனுப்பி நீதிபதியை ஸ்மரணையற்றவராய் கரையினின்றுமெடுப்பித்தனர். எடுப்பித்துத் தக்க சிகிச்சை செய்வித்தும், நீதிபதி உயிர்நீங்கினர். இவருக்கு முன்னிருந்த நீதிபதியாகிய டேவிற்சிறினியவென்பவரும் குறித்தவிடத்தில் இவ்வாறே நீரிலமிழ்ந்தி இறந்தனராம். இப்படிப்பட்ட அபாயமான நீர்நிலையில் ஸ்நானஞ்செய்யாது விலகிக்கொள்வதன்றோ உசிதம்.

தலைமைக்காரனும் நீதிபதியும்.

தலைமைக்காரன் மூன்றுமாசக் கடுங்காவல் விதிக்கப்பெற்றமை.

நிகழும் ஜூலாய்மீ 9உ சுப்பிறீங்கோட்டு நீதிபதி மெஸ் R. டயஸ் அவர்களால் ஒரு கொலை வழக்கு விளக்கப்பட்டது. அவ்வழக்கில் எதிரிகள் மூவரும் நிரபராதிகளென விடுதலையடைந்தனர். முறைப்பாடு என்னவென்றால் உவில்ப்பிற்றுவென்னுங்கிராமத்தில் தொனிவிஸ் என்பவன் வயலில் நின்றபோது எதிரிகள் அடித்ததனும், முதலாம் எதிரியின் அடியினால் அவன் இறந்தானென்பதே. எதிர்பக்கத்து நியாயமென்னவெனில், எதிரிகட்கும் தலைமைக்காரனது இனத்தவர்கட்கும் சொரியற்பங்கான வயல் இருந்ததென்றும், அவ்வயல் பின்னர் மனமொத்துப் பிரிக்கப்பட்டதென்றும், எதிரிகள் தமது பங்கை உழுதுகொண்டு நிற்கும்போது தலைமைக்காரனும் அவனது மருமக்களிருவரும் வேறு சிலரும் அங்குவந்து கலகந்தொடங்கி அடிபட்டபோது முதலாமெதிரியையுங் காயப்படுத்தினரென்றும், சாக அடித்தவன் இன்னாரென்று தமக்குத் தெரியாதென்பதுமே. யூரிமார் எதிரிகள் மூவரையும் நிரபராதிகளெனக் கண்டபின்பு, அவ்வழக்கிற் சாட்சிசொன்ன தலைமைக்காரன்மீது பொய்ச்சத்தியஞ்செய்தானென வழக்குத்தொடுக்க இடமுண்டெனக் கூறினர். நீதிபதியும் தாமெண்ணியபடியே யூரிமாரும் கூறினரென அவர்களை வியந்தனர். எதிர்பக்கத்து நியாயதுரந்தரரு மெழுந்து தலைமைக்காரன் சென்ற வியாழக்கிழமை விளக்கத்தில் எதிரிகளை வெருட்டினானென்றும், அப்பொழுது யூரிமாரும் அவனை பொய்ச்சத்தியஞ் செய்தானென்று கூறினமையினாலும் கோட்டு நிந்தாட்சணை யென்னுங் குற்றந் தலைமைக்காரன்மீது பாரித்தற்கு இடமுண்டெனக் கூறினர். நீதிபதி உடனே தலைமைக்காரனைக் கூட்டிலேற்றி விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லும்போது "எனது எண்ணமும் இந்தயூரிமாரின் அபிப்பிராயமு மென்னவெனின்; நீ பொய்ச் சத்தியஞ் செய்திருக்கிறு யென்பதே உன் சாட்சியம் முழுவதுஞ் சுத்தப்பொய்; இந்தச் சங்கடங்களெல்லாம் நீயே மூலகாரணனாயுள்ளனை; நீயும் உன் சுற்றத்தவர்களும் உவிலப்பிற்றியாப்பகுதிக்குப் பெருந் தீமை விளைத்துவந்திருக்கலாமென்பது வேறு நடந்த வியாச்சியத்தினாலும், உனக்கு மாறாக 1913-ம் ஆண்டில தேசாதிபதிக்கு அனுப்பப்பட்ட பிட்டிசத்தினாலும் நன்கு விளங்கும். நீ உன் பகுதியில் வசிக்குஞ் சனங்கட்குத் துன்பம் விளைத்துக்கொண்டே வந்தனை; முதலியார் மூலமாக ஏசண்டருடைய தயவைப் பெற்றுக்கொண்டு நீ சனங்களை நிஷ்டூரஞ்செய்து வந்தனை; ஏசண்டர் தம்அதிகாரத்தைத் தக்கபடி செலுத்தியிருந்தால் உன்பகுதியில் வசித்த சனங்கள் இத்துணைக் கஷ்டமடைந்திருக்கமாட்டார்கள்; உனக்கு மாறாகப் பெட்டிசம் கிடைத்த காலத்தில் ஏசண்டர் உன்னைத் தண்டித்திருந்தால் இப்பொழுது இந்தக் கொலை நடந்திருக்கமாட்டாது. இந்த முதலாமெதிரியைக் குற்றினவர்கள் உன் மருமக்களில் ஒருவனாயிருக்கவேண்டுமென்பது என் பூரண நம்பிக்கை. இப்பொழுதும் விஷயமொன்றும் கைகடந்துபோகவில்லை. அந்தத் தக்டர்மீது முடிப்புறந் தானி வியாச்சியந் தொடுப்பரென்றே நினைக்கின்றேன். கூட்டில் இரண்டுமணிநேரம் நின்று சாட்சி சொல்லவே கோட்டார் நீயொரு கள்ளனென்பதை உடனே விளங்கிக்கொண்டனர். உனக்கு மூன்று மாசக் கடுஞ்சிறைவிதிக்கின்றேன். (நீதிபதி மறியலறையைக் காட்டி) நீ அதற்குட்போ, உன்னை அவர்கள் அடைக்கட்டும்' என்றனர். இப்படிச் சொல்லும்போது விடுதலைசெய்யப்பட்ட 3 எதிரிகளும் விளக்கமறியலறையிற் பின்னரும் அடைக்கப்பட்டிருத்தலைக்கண்டு ஏன் அடைக்கப்பட்டிருக்கின்றனரென நீதிபதி வினவியபோது குறித்த பொலிஸ் விதானையை மறைப்பித்தனரென்னுங் குற்றத்தின்பேரில் அம்மூவரும் மாத்துறைக் கோட்டில் விளக்கப்படவேண்டியிருக்கின்றனர். அவர்களைப் பிணையில்விடவில்லையென்று கோட்டு உத்தியோகத்தர்சொன்னபோது நீதிபதிசினந்து அவர்களைப் பிணையின்றி உடனே விடுதலைசெய்யும்படியும் அவர்கள் மாத்துறைக் கோட்டில் தவணைக்கு வந்து வெளிப்படுவார்களென்றுஞ் சொல்லினர்.

தந்திச் சமாச்சாரம்.

போல்ஷுவிக்ஸ்.

ஜூலாய்மீ 3உ.

பொல்ஷுவிக்கட்சியார் போலண்ட் சைநியத்தைப் பின்னிடச் செய்கின்றனர். போலண்ட் சனங்கள் அதிக சேதங்களை யடைந்தனர். ஐக்கிய தத்துவராசாங்கத்தினர் அவர்கட்குத் துணைசெய்வரெனச் சொல்ல விடமில்லையாம்.

துருக்கியர் தோல்வி.

ஜூலாய்மீ 6உ.

பெலக்ஸார் என்னுமிடத்தில துருக்கிய சைநியம் அதிக தோல்வியடைந்ததாகச் சொல்லப்படுகின்றது. துருக்கியரை கிரேக்க சைநியம் துரத்திச்செல்கின்றது.

துருக்கிய சமாதானம்.

ஸ்பா என்னுமிடத்திற்கூடிய மகாசங்கத்தில் துருக்கியருடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டு அவர்கட்கு விதித்த சமாதான நிபந்தனைகளிற் சிறிதுஞ்சகாயஞ்செய்தல் இயலாதெனச் சொல்லப்பட்டது. துருக்கியர் இன்னும் 10 தினங்களுள் யுத்தசமாதானப் பத்திரத்திரத்திற் கைச்சாத்திடவேண்டுமென்பதுவும் விதிக்கப்பட்டது.

ஸ்பாஎன்னுமிடத்திற் கூடிய மகாசபை.

ஜூலாய்மீ 7உ.

யுத்த நிபந்தனைவிஷயங்களைக்குறித்துப் பேசும்படி ஸ்பா என்னுமிடத்தில் ஐக்கியதத்துவராசாங்கத்திற்குரிய பிரதிநிதிகளும் மந்திரிமாரும் ஜர்மனிய பிரதிநிதிகளும் இராச தந்திரிகளும் கூடினர். ஜர்மனியமந்திரி ஜர்மனியசைநியம் யுத்த ஆயுதங்களை நீக்கிக்கொள்ளும் விஷயத்தைக்குறித்துப் பேசியபோது ஆங்கிலமந்திரியாகிய லயிட்ஜோர்ஜ் அவர்கள் "ஜர்மனியர் யுத்தநிபந்தனைகளை நிறைவேற்றக்கூடிய நிலையிலிருக்கவில்லையோ" எனக்கேட்டபோது ஜர்மனியமந்திரி "இருக்கவில்லையென்பதல்ல, ஜர்மனியர் படுகஷ்டத்தைச் சிந்திக்கவேண்டு" மென்றனர். அப்பொழுது ஆங்கில மந்திரி, ஐக்கிய தத்துவராசாங்கத்தினர்க்கு ஆத்திரம் விளைப்பது ஜர்மனிய சைநியம் நிபந்தனைப்படி ஆயுதங்களை யகற்றிவிடப் பின்னிற்பதேயென்றும், ஜர்மனிய சைநியத்தை ஆயுதங்களகற்றும்படி ஐக்கிய தத்துவராசாங்கத்தினர் வற்புறுத்தி நிற்றல் அவசியமில்லையேல் அவர்கள் பின்னரும் உலகத்தோர்க்குத் தீங்கு விளைப்பரென வஞ்சியேயென்றும், ஐக்கிய தத்துவராசாங்கத்தினர் ஜர்மனியர்மீது வன்கண்மை சாதிக்கவேண்டுமென்ற நோக்கங் கொண்டு கேட்கின்றனரல்ல, ஜர்மனிய சைநியபலமும் பொல்ஷுவிக்கட்சியார், அக்கிரமமும் அங்கு அதிகமாயிருக்கின்றதென்றுங் கூறினர். மேலும் ஜர்மனியர் சமாதானவிஷயத்தில் உள்ளபடி விசுவாசமாக நடப்பவர்களாயிருந்தால் நிபந்தனைப்படி போர்வீரர்களை நிராயுதபாணிகளாக்கியிருக்க வேண்டுமென்றும், குறித்த அச்சங்கம் கூடிய நோக்கம் இவ்விஷயங்களை முற்றுக்க வேண்டியேயென்றும், முற்றுக்காவிடின் அச்சங்கத்தினா லெய்தும் பயன் யாதுமில்லையென்றுங் கூறினர். அப்பொழுது ஜர்மனிய பிரதிநிதிகள் அடுத்த புதன்கிழமைவரையில் தவணை தரும்படி கேட்டனர். அவர்களுடைய நோக்கம் கூட்டத்திலிருந்து விலகிக்கொள்வதாம். ஆங்கில மந்திரி பின்னரும், ஜர்மனியர் இன்னும் 2,00,000 போர்வீரர்களை வைத்திருக்கின்றனரென்றும், 50,009 யந்திரத் துப்பாக்கிகளும், 12,000 துப்பாக்கிகளும் அவர்களிடத்தி லின்னு முள்ளனவென்றும், பத்துலட்சக் கணக்கான தோட்டாக்கள் அவர்கள்வசமிருப்பவும் அவர்கள் 1,500,000 தோட்டாக்களை மாத்திரம் ஒப்பித்திருக்கின்றனரென்றுங் கூறினர். இச்சங்கம் முடிவுபெறுது இடையிற் குளம்பிவிடுமென வெண்ணப்படுகின்றது. தத்துவராசாங்கத்தினர் சில நிபந்தனைகளுடன் ஜர்மனியர் முற்றுச்செய்வதற்குத் தவணையுங் கொடுத்திருக்கின்றனர்.

ஜர்மனியர் ஆயுதங்களை ஒப்புவிக்கச்சம்மதித்தல்.

ஜூலாய்மீ 8உ.

ஜர்மனியர் ஸ்பாஎன்னுமிடத்தில் நடந்த கூட்டத்தில் சைநியத்தை நிராயுதர்களாக்கி யுத்தகருவிகளையும் ஐக்கியதத்துவராசாங்கத்தினர்வசம் ஒப்பித்தற்குச் சம்மதித்துக் கைச்சாத்துமிட்டனராம். இன்னும் அவர்கள் 3 பாரிய யுத்தக்கப்பல்களையும் 3 குறூசர்க் கப்பல்களையும் 16 டிஸ்திரோயர்க்கப்பல்களையும், 50 தொப்பிடோ வள்ளங்களையும் பல ஆகாயரதங்களையும் ஒப்பிக்கவேண்டியவர்களாயிருக்கின்றாராம் 12000 ஆகாயரதங்களுள் 150 ரதங்கள்மாத்திரம் ஒப்பிக்கப்பட்டனவென்றும், 4000 அழிக்கப்பட்டனவென்றும், 24000 யந்திரங்களுள் 1500 மாத்திரம் ஒப்பிக்கப்பட்டனவென்றும் 10000 உடைக்கப்பட்டனவென்றும் ஜர்மனியரே சொல்லுகின்றனராம்.

போசியப்என்னுந் துறைமுகத்தை ஜப்பானியர் பிடித்துக்கொள்ளுதல்.

போட்டாசருக்கு வடக்கே ருசியருக்குரியதாயிருந்த பொசியத் என்னுந் துறைமுகத்தை ஜப்பானியர் பிடித்துக்கொண்டனர்.

கடிதம்.

"திருவாசக விரிவுரை."

ஒருநவீனப் பிரசங்கம்.

"பல்லாவரம் சமரச சன்மார்க்க நிலைய குரு" வாகிய "சுவாமி" வேதாசலம் என்பவர் எழுதி வெளியிடும் "திருவாசக விரிவுரை"யிலே சைவ சித்தாந்தக் கொள்கைக்கு முரணான பல ஆபாசங்கள் பிரதிபாதிக்கப்படுகின்றன. "வேதாசலம்" என்று பேர் வகித்துக்கொண்டும் வேதங்களை மாணுட வாக்கென்று சாதிக்கத் துணிந்திருப்பது போல, அவர் சித்தாந்தக் கொள்கைகளையும் தமது சிற்றறிவுகொண்டு திருத்த முயலுகின்றார்.

அவருடைய உரை, 64-ம் பக்கத்திலே மாயாமலத்தை எடுத்து விளக்குமிடத்து, மாயேயங்களிற் காணப்படும் அழுக்குகள் எல்லாம் ஆணவத்தின் செயல்களேயன்றி மாயையின் செயல்களன்றென ஒரு நவீன சித்தாந்தம் சிருட்டிக்கின்றார்.

"மாயையின் காரியப் பொருள்களான செம்பு இரும்பு முதலியவற்றிற் களிம்புக் துருசுமாயும், கரிவளியில் முடைநாற்றமாயும், உயிர்களின் ஊனிலும் மாஞ் செடி கொடிகளின் தசையிலும் அழுகல் நாற்றமாயும் புலப்படுவது ஆணவமலத்தின் செயலேயாம்" என்பது அவருடைய கூற்று.

சித்தாந்த வல்லாரகிய அருணந்திசிவாசாரியர் ஆணவமலத்தின் இலக்கணங் கூறுமிடத்து

"ஒன்றதாயனேகசத்தியுடையதாயுடனாயாதியன்றதா யான்மாவின்றனறிவொடு தொழிலையார்த்து, நின்றுபோத்திருத்துவத்தைநிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந், தென்று மஞ்ஞானங்காட்டுமாணவமியைந்து நின்றே." என்றும்,

"போத காரிய மறைத்து நின்று புகன் மலங்காண்" என்றும்

ஆணவமலம் ஆன்மாக்களுடைய அறிவை மறைப்பதோர் அதிசூக்குமப்பொருள் என்று விளக்கினரன்றி, அது மாயேயங்களிற்காணப்படும் அழுக்குகளுக்கும் காரணமாமென்று எங்காவது சொன்னாரில்லை.

மாயை அறிவை விளக்குங் கருவியாதலின் அது அழுக்குடைப் பொருள்களைப் பிறப்பிக்க மாட்டாதென்பது 'சுவாமி'' யுடைய கருத்துப் போலும்! மாயை அறிவைவிளக்குங் கருவியாதல் மாத்திரமன்றி போகந்துய்ப்பித்தற்கு பெருங்கருவியாகும் என்பதையும், அறிவை விளக்குதற்கும் போகத்தைத் துய்ப்பித்தற்கும் அழுக்குடைப் பொருள்களும் வேண்டப்படும் என்பதையும் 'சுவாமி'' அறிந்துகொண்டால் சித்தாந்தக் கருத்துக்களை இங்ஙனம் தமது மனம் போனவாறு பிறழ்த்திடமாட்டார்.

அருணந்திசிவாசாரியர், மாயாமலத்தின் இலக்கணத்தை விளக்குமிடத்து "மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே" என்று வெளிப்படையாக எடுத்துக் காட்டியிருப்பவும் நமது 'சுவாமி' மாயாமலம் 'தன்னிலையில் தூயதாய்' உள்ளது என்று பின்னும் ஒரு புதுச் சித்தாந்தம் படைக்கிறார். தன்நிலையில் "தூய" தாயுள்ளது திருவருளொன்றேயென்பதை "சுவாமி" கேட்டிலர்போலும்! மாயாமலத்தாற் பெறப்படும் மயக்க விளக்கத்துக்கும் திருவருளாற் பெறப்படும் 'தூய' விளக்கத்துக்கும் பேதங் காணச் 'சுவாமி' அறிந்திலர். மாயை சுத்தம் அசுத்தம் மிச்சிரமென முத்திறப்படுமென்பதையும் 'சுவாமி' சிந்தித்தாரில்லை. மாயைக்குரிய தூய்மையையும் திருவருளுக்குரிய சுத்தத்தையும் அவர் பிரித்துணரும் ஆற்றலிலராயினர்.

இன்னமும், ஆணவ மலத்தாற் பெறப்படும் மயக்கம் எது, மாயாமலத்தாற் பெறப்படும் மயக்கம் எது என்று நமது 'சுவாமி' பகுத்துணரவல்லராயின் சித்தாந்த நூலாசிரியர்களையும் அருட்பெருந்தகையாகிய மணிவாசகப் பெருமானையும் திருத்துமாறு இங்ஙனம் அகங்கரித்து எழுந்திடமாட்டார்.

'சுவாமி'யைப் பாராட்டும் 'சாமி' களும் சிலர் இக்காலத்துண்மையால் 'சுவாமி' நமது சமயத்துக்குச் செய்யும் பெருங்கேட்டை எடுத்துக் காட்டவேண்டியது எமது கடமையாயிற்று. யாதானுமொரு ஆதாரமின்றி 'சுவாமி' படைக்கும் விபரீதார்த்தங்களால் சனங்கள் ஏமாந்து போகாதபடி நாம் இத்தால் எச்சரிக்கை செய்கின்றேம்.

ஒரு சைவசித்தாந்தி.

மாதரொழுக்கம்.

(முற்றொடர்.)

பெண்ணானவள் சூரியோதயத்திற்கு முன் நித்திரைவிட்டெழுந்து அவசிய கருமம் முடித்து, வீடு மெழுகி கோலமிட்டு, பாத்திரம் விளக்கல்வேண்டும். பின்பு ஸ்நானம் பண்ணிச், சூரியனை நமஸ்கரித்து, தனது நாயகனது நித்திரையை நீக்கி, அவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்தல்வேண்டும். அதன்பின் தனது தாய் தகப்பன்போன்ற மாமி மாமனையெழுப்பி, அவர்களுக்குச்செய்யவேண்டிய பணிவிடைகளைச்செய்தல்வேண்டும். பெண்கள் அவ்விடத்தில் நடப்பதை இவ்விடத்திற் சொல்லியும், இவ்விடத்தில் நடப்பதை அவ்விடத்திற் சொல்லியும் கலகம் விளைவித்தலாகாது. சில பெண்கள் தங்கள் நாயகருக்கு இலையில் அன்னத்தைப் படைத்துவிட்டு, அரிசியில்லை, உப்பில்லை, கறியில்லையென்று சொல்கின்றார்கள். அப்படி அக்கோரஞ் சொல்லலாகாது. ஏனெனில் அவர்களுக்குப் போசனத்தில் மனஞ்செல்லாது. கற்பிற்சிறந்த மாதர்கள் தங்கள் நாயகர் உத்தரவின்றித் திருவிழா முதலிய சிறப்புக்களைப் பார்த்தலாகாது. மாதர்கள் தங்கள் நாயகர் பார்த்து மகிழும்பொருட்டுக் கன்னிகை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளலாம். ஆனல் தங்கள் நாயகர் இல்லாதபொழுது அலங்கரித்துக் கொள்ளலாகாது. தங்கள் நாயகரை இகழ்ந்து தூற்றுகிறவர்களுடைய முகத்தையும் பார்த்தலாகாது. பெண்கள் தங்கள் நாயகருடைய சகோதரர்களைப் பேதமாயெண்ணுது அவர்களில் மூத்தவர்களைத் தகப்பனாகவும், இளையவர்களைப் பிள்ளையாகவும் நினைத்தல்வேண்டும். கற்புடைய மாதர்கள் தங்கள் மாமியைத தாயாகவும், மாமனைத் தகப்பனாகவும், மைத்துனியைச் சகோதரியாகவும் பாவித்தல்வேண்டும். ஐந்து வயது ஆண்பிள்ளையைக் கண்டாலும், ஐம்பதுவயதுப் பெண்களும் எழுந்து நிற்றல் வேண்டும். பெண்கள் தங்கள் தாய் தகப்பனைப் பிரிந்திருந்தாலும், நாயகரைப் பிரிந்திருத்தலாகாது. பெண்கள் தங்கள் நாயகருடைய சொல்லைத் தட்டாது நகமுஞ் சதையும் போல் ஒரே மன துடையவர்களா யிருத்தல் வேண்டும். தங்கள் தாய்வீடு அருகிலிருந்தாலும் அடிக்கடித் தங்கள் கணவருத்தரவின்றிப் போகலாகாது. தங்கள் கணவர் அழகில்லாதவராயினும், கல்வியில்லாதவராயினும், நோயுள்ளவராயினும் அவரைத் தெய்வமாகப் பாவித்தல்வேண்டும். புருஷர்கள் கோபங்கொண்டால், பெண்கள் தங்கள் இனிய வசனத்தினுல் அவர்கள்கோபத்தைத் தணித்தல்வேண்டும். பெண்கள் தாங்கள் மாதாந்தருதுவாகி வீட்டினின்றும் விலகிப் புறத்தே வசிக்கின்ற நான்கு நாட்களிலும் தங்கள் கணவர்முன் வரலாகாது. ஐந்தாவது நாளில் ஸ்நானஞ் செய்துகொண்டு நன்மையுண்டாகும்படி தங்கள் நாயகரை நமஸ்கரித்தல்வேண்டும். பெண்கள் கர்ப்பமாயிருக்கும்பொழுது தங்கள்தேகத்தைச் சுத்தமாய் வைத்திருத்தல்வேண்டும். பெண்கள் தாங்கள் கர்ப்பவதிகளா யிருக்கும்பொழுது பூசினிக்காய், பலாக்காய், பயற்றங்காய் முதலிய வாய்வுள்ள பொருட்களை யுண்டு, தங்கள் நாயகரைக் கஷ்டப்படுத்தலாகாது. எளிதிற் செமிக்கக்கூடிய சுத்தமான உணவையே உண்ணல்வேண்டும். செல்வர் வீட்டுப் பெண்களிற் சிலர், வேலை ஒன்றும் செய்யாது, அசையாமல் ஓர் இடத்தில் இருக்கின்றார்கள். அப்படியிருத்தல் கூடாது. நன்றாய் வேலைசெய்தல்வேண்டும், தினந்தோறும் கடவுளை வணங்கல்வேண்டும், தங்கள் நாயகர் இறந்தபின் தினம் ஒருதரம் போசனஞ் செய்து, சந்தனம், குங்குமம், தாம்பூலம் முதலியவைகளை அகற்றல் வேண்டும். கைம்பெண்கள் மேன்மையான விரதங்களை விதிப்படி அனுஷ்டித்து வருவார்களாயின் மறுபிறப்பில் தங்கள் நாயகர்களுடைய இருப்பிடத்தையடைவார்கள்.

இங்ஙனம்.
க. நவரத்தினம்மாள்,
வண்ணார்பண்ணை.

அவசரம்:

அவசரமென்பது எப்போதாவது ஒரு சமயத்தில் எல்லாருக்கும் உண்டாகலாம் என்றிருந்தபோதிலும், எந்தக்காரியத்தையும் அவசரத்துடனே செய்யும் வழக்கத்தை அடியோடு நீக்கிவிடுதல் வேண்டும். ஆராய்வின்றி அவசரப்பட்டுச் செய்கிற எந்த வேலையுஞ் சுத்தமாய் முடியமாட்டாது. மிக்க கல்வியறிவில் மேம்பட்டவர்களும் இவ்வண்ணமாய துரப்பியாசத்தால் பலமுறைகளிலும் பிழைபட்டுப்போகின்றார்கள். பிள்ளைகள் சிறுபாயத்திற்றுனே எந்தவகைச் செய்கைகளையும ஆறுதலின்றி அவசரப்பட்டு முடிக்கிற தன்மையைப் பழகிக்கொண்டால் "தொட்டிற் பழக்கஞ் சுடுகாடுமட்டும்" என்றதுபோல மரணபரியந்தம் அந்தப் பழக்கம் விட்டுப் போகமாட்டாது. இதனுலே குசாக்கிரபுத்தியினுங் கூர்ந்த மதியுடைய சில வாலிபர்கள் இமுதை மாக்களது வகுப்பிலே வைத்து எண்ணப்படுகிறார்கள். இந்த அவசரகுணம் பிள்ளைகளிடத்திற் றேற்றப்படும் ஆரம்பகாலத்திற்றுனே பிதா மாதாக்களாவது, உபாத்திமாராவது கண்டித்து இல்லாததாக்கிவிடுதல் வேண்டும். விற்பன்னரை விவேகசூனியராக்கும் கெட்ட வழிகளில் ஏதையும் ஆராய்வோடு அமைதியாய்ப் பாராமல் அவசரப்பட்டுப் படபடப்போடு பார்ப்பதும் ஒன்றாகும். இதனுலன்றோ "அவசரவேலை அரைக்கால்வேலை" என்றும், "அவசரகாரனுக்குப் புத்திமட்டு" என்றும், "அவசரக்கோலம் அள்ளித்தெளித்தல்போல்முடியும்" என்றும், "ஆய்ந்தோய்ந்துபாராதான் காரியந் தான் சாந்துயரந்தரும்" என்றும், "பதறுத காரியஞ் சிதறுது" என்றும், "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருவப் பாயும்" என்றும், "அவசரகாரன் புத்தி தலைக்கேறுது" என்றும், "அவசரப்பட்டாலும் ஆகிறதுதான் ஆகும்" என்றும் ஆன்றோர் கூறியுள்ளார். இதற்கு நிதர்சனமாகத் தீவிரகதியுடைய முயலை மந்தகதியுடைய

(கூர்மம்) ஆமை ஓட்டத்திற் செயித்து வெற்றிமாலை சூடியதென நாம் பாலியத்தில் பாலபாடத்திற் படித்திருக்கின்றோமல்லவா? ஆதலால் ஒவ்வொரு பிள்ளைகளும் எந்தக்காரியங்களையும் அவசரப்பட்டுச் செய்யும்வழக்கத்தை உணர்த்து நீக்கிவிடுதல் உத்தமமாகும்.

இனித் தேகசுகத்தைக் கைவிட்டு வாயைவயிற்றை அலட்சியஞ்செய்து தமக்குத் துரோகிகளாய் அவசரப்பட்டு உழைப்பவர்களைப்பற்றிச் சிறிது கூறுவாம். கோடுகளிலே நியாயப்பிரமாணிகளும், வைத்தியர்களும், வியாபாரிகளும், கணக்கப்பிள்ளைமாரும், இன்னும் பல தொழிலாளிகளும் அனுத்தினமும் ஆறுதலின்றி எந்தநேரமும் அவசரம் அவசரம் என்று பிரயாசப்பட்டுக்கொண்டு திரிவார்கள். இவர்களுக்கு ஒருபோதும் சாவகாசம் என்பது கிடையாது. அவர்களுக்கு ஸ்நானம் அவசரம்; செபதவம் அவசரம், சாப்பாடு அவசரம்; மற்றும்எல்லாம்அவசரந்தான். இவர்களுக்கு ஏன் இவ்வளவு அவசரம்? பணம் என்னும் பிசாசு பற்றிக்கொண்டமையால்தான் இவர்கள் எல்லாவற்றையும் அவசரம் அவசரம் என்று செய்யாவிட்டால் லாபங் கிடைப்பது துர்லபம். கொஞ்சமும் சிரமபரிகாரமின்றி வயிற்றைக் கவனியாமல் பணமென்னும் பேய்பிடித்து இவ்விதமாய் அவசரப்பட்டு, இவர்செய்யும் லாபம், முடிவில் இடிப்பொடிந்த அசுவங்கள்போலத் தேகசௌக்கியம் முழுதுமிழந்து நோய்வாய்ப்பட்டுச் சடுதியில் படுக்கையில் விழுவதுதான். ஐயையோ! ஆப்தர்களே, தேகத்தில் ஆற்றலுள்ளவரையில் பசிபட்டினிகிடந்து எவ்வளவுசிரமப்பட்டாலும் கிஞ்சித்தும் தாக்கமாட்டாது. கொஞ்சம் இரத்தங் குறைந்து தளர்ச்சியடைந்துவிட்டால், தேகவலியனைத்துந் தொலைந்துவிடும். அப்பால் பாயிற் படுத்தது முதல் தென்புலஞ் செல்லுங்காறும் ஒருநாளாவது மருந்தருந்தாமலிருக்கமுடியாது. இங்ஙனம் பசி தாகம் முதலியவற்றைப் பொருட்படுத்தாது பட்டினி கிடந்து அவசரப்பட்டு உழைத்தவனுக்குப் பிரதமத்தில் உற்பத்தியாகும் நோய் குன்மம், அல்லது அசீரணத்தோடு கூடிய அன்னத்துவேஷம். இந்தநோயின் குணம், அருந்திய ஆகாரஞ் சரியாய்ச் சீரணமாகாமையால், உவர்த்துப்பண்ணுதல், பசியின்மை, கைகால் ஓய்ச்சல், தேகவலி குன்றுதல், இன்னும் பலவிதமான நோய்கள் தோற்றப்படுவதோடு முடிவில் அநேகமும் அடியோடு அற்றுப்போகும். இது அநேகருடைய அனுபவத்திற் கண்ட உண்மை. இம்வைச்சகத்துக்குப் பொருள் இன்றியமையாததுதான். அதற்கு "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்றும், "பண மில்லாதவன் பிணம்" என்றும், "ஈட்டி எட்டினவரையிற் பாயும், பணம் பாதலம்வரையிற் பாயும்" என்றும், "முந்திப்பதஞ்சலிக்கு முன்னின்று கூத்தாடும் தந்தக் கனகசபை ஆர்வடிவம்" என்றும், "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை, யெல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்றும், கூறியுள்ள ஆன்றோர் வாக்கே சான்றாகும். ஆதலால் பொருளீட்டவேண்டாமென்று நாமிங்கே கூற வரவில்லை. அங்ஙனம் பொருளீட்டுதல் அத்தியாவசியமெனச் சொல்லியிருப்பினும், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங், கைம்புலத்தாறோம்பறலை" என்னும் பெருநாவலர் திருவாக்கின்படி, இல்வாழ்வான்தன்னால் ஓம்பப்படும் ஐம்பாலாருள் தன்னையும் பசி தாகம் முதலியவற்றினால் தேகத்தைத் தளரவிடாது பாதுகாத்தல் சிறப்புடையறமாகும். இதுபற்றியே, "பொன்னைப்போலத் தன்னைப்பேண்" என்றும், "நெய்யும் பாலும் நிறையவுண்ணவிடில் ஐயன்சேவடிக்காளாவதெப்படி"? என்றும், "சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும்" என்றும், முதுமொழிகள் வழங்குகின்றன. தனது சரீரசுகத்தைப் பேணாதவன் தனக்குத் துரோகியாகின்றான். ஒருவன் பட்டினிகிடந்து பொருள் சம்பாதித்து நித்தியநோயாளியாய் விட்டால், அப்பொருளினால் அவன் எய்தற் பாலதாகிய பயன் யாது? அவனுக்கு அப்பொருள் சபுஞ்சகனுக்கு வாழ்க்கைப்பட்ட மங்கைப்பருவமுள்ள நங்கையை நிகர்க்கும். அவசரப்பட்டுப் பட்டினிகிடந்து ஈட்டப்பட்ட பொருள் முடிவில் எசமானுக்கு உபயோகப்படமாட்டாது. தேனீயின் தேட்டம் போல முடிந்துவிடும். ஆனால் நாம் அவசரப்பட்டுச் செய்யவேண்டிய காரியங்களுஞ் சில உள்ளன. அவை கடவுள் வழிபாடும், புண்ணியச் செயலுமேயாம். என்னென்றால் "நெருநலுளனொருவனின்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு" என்றும், "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்றும், "நேற்றிருந்தான் இன்று வெந்து நீறானான்" என்றும், "சதிரெதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்" என்றும், "அர்த்தமத்தியம் குமிச்சிரசாபம்" என்றும், "புன்னுனிமேனீர்போனிலையாமையென் றெண்ணி யின்னினியே செய்கவறவினை" என்றும், இக்காயம் நிலையற்றதென மேதாவியர் கூறுமாற்றானும், "ஒன்றே செயவும் வேண்டும் ஒன்றும் இன்றே செயவும் வேண்டும் இன்றும் இன்னே செயவும் வேண்டும்" என்றும் கபிலநாயனார் கட்டளையிடுதலானும், கடவுள் தியானத்தையும், தருமசெய்கையையும், நாளை நாளையென்று பின்போடாமல், அவசரப்பட்டு அவரவரும் எம்மால் முடிந்தவரையில் இயற்றிப் பிதாநெறியை எய்தக்கடவோமாக.

இங்ஙனம்.
க. வைத்தியலிங்கபிள்ளை,
சுன்னாகம்.

சிவஞான தானம்.

சிவஞானதான பலம்.

இவ்வித்தியாதானத்தால் உலகுபெறும் பயன்: வித்தியாதானத்தை முறைப்படி செய்வாராயின் உலகத்துக்கு விக்கினங்கள் சிறிதுமில்லை. ஆக்கமுமின்பங்களு முண்டாம். சித்தி பெருகும். சோரர் நீங்கி மறைவர். பாகமுஞ்சேயும் தேய்ந்து கெடும். நன்மை தரும் மழை மாதந்தோறும் பெய்யும். இதற்குப் பிரமாணம்,

"இத்தகையே புரிந்திடிலோ ரிடையூறும் புவிக்கில்லை, வத்தனையே யுளநன்மை வரையனைத்தும் புகழ்மல்கும், சுத்திருங் குலைந்தகல்வர் சொடுவிளையு மடிபிணியும், வைத்தழியு மழைபொழியுந் திங்கடொறு நலமுறவே" என்பதாம். சிவஞானத்தைக் கொடுக்க வல்ல புத்தகத்தைத் தானஞ்செய்வோரடையும் பயன்: புத்தகத்தைத் தானஞ்செய்தவர் தேவ அரம்பையர்கள் சூழ்ந்து சேவிக்கத் தேவ விமானத்திலேறிச் சிவலோகத்திற் சென்று ஒரெழுத்திற்கு ஆயிரங்கற்பமாகத் தங்கியிருப்பர் என்பது. கல்வி கற்பிக்குமாசாரியருக்கு வஸ்திரதானஞ்செய்வார் பெறும் பயன்: சிவாகமத்தைப் பாடஞ்சொல்லும் சிவயோகி மகிழுமாறு மனமுருகி வஸ்திரதானஞ் செய்வோர் சிவாகமத்தை விருப்போடெழுதினவரடையும் பலத்தை அடைவரென்பது. (அஃது எழுத்தொன்றற் காயிரங் கற்பம் சிவலோகத்தமர்தல்.) ஆசாரியருக்கு அன்னபானாதிகளை அளித்தோர் பெறும் பயன்: சிவாகமத்தைப் பயிற்றும் சிவயோகிகளுக்கு மனமுருகி ஈர்துவருடம் அன்னபானாதிகளைக் கொடுப்போர் சிவாகமத்தைத் தானஞ்செய்த பலத்தை அடைவர் என்பது. (இதுவும் மேற்குறிக்கப்பட்ட பலமேயாம்.) அவர்களே சிவபக்தர்கள். சிவாகமங்களை ஆராய்வார் எவரெனினும் அவர்க்கு அன்னம், வஸ்திரம் முதலியன தானஞ்செய்வோரடையும் பயன்: மாயையினால் வருஞ் சந்தேகவிபரீதங்களை நீக்கிச் சத்தியஞானத்தையளிக்கும் சிவாகமங்களைக் குருமுகமாக ஓதுவார்க்கு வஸ்திரம், அன்னம் முதலியன கொடுப்போர் தம் மூவேழ் சுற்றமும் புத்திரரும் வைகுண்டத்தை யடையத் தாம் சிவலோகத்தையடைவரென்பது கீழ்வருஞ் செய்யுட்களாலும் இனிது புலப்படும்.

"இத்தகையே புத்தகத்தை யீந்தாரு மெழுத்தொன்றற், கத்தனமர் புரத்துறைவ ராயினமார் கற்பமுற, முத்தனைப முறவனைச முளைத்தபிறை வளைத்தநதற், றந்தையன மொழிமடவார் தங்கிப தேர்த்தானத்தே"

"பரமன் திருவாய் மொழியதனைப் பயிற்றும் பரம யோகிதனக், குருகி யாடையுவப்புறவே புதவுமர்வதா மூளளவும், பொருவில் பரமசிவ ஞானகோசம் புரிவோருற்பல, மருவுவார்களவரன்றோ பத்தராவார் வரதனுக்கே."

"பரமர் திருவாய் மொழியதனைப் பயிற்றும் பரம யோகிகளுக், குருகி யவர்கட்கன்னதி யைபர்தவருட முதவுவார், பொருவில் பரமசிவ ஞான கோசம் புரிவோருற்பல, மருவுவார்கள வரன்றோ பத்தராவார் வரதனுக்கே"

„மையலனைக்கும் வாக்கியத்தை வாக்காற்பயிற்றி மனத்தாலு, மையமறவே யாராய்ந்தார்க் கன்னமாடை யளிப்பாரும், செய்ய சடையார் சிவபுரத்தைச் சேர்வார் சிறவரிறுதியரும், மையமுண்டான் வைகுண்டமூவேழ்சுற்றமருவிடவே"

என்பனவாம். சிவஞானதானத்தைப் பற்றியும், அதன் மகத்துவத்தைப் பற்றியும், அதன் பலனைப்பற்றியும் சுருக்கி விளக்கினோம்.

சிவஞானதானபரிபாலனம்.

பண்டைக்காலத்துத் தமிழரசர்களாலும், ஆதீனகர்த்தர்களாலும் பரிபாலிக்கப்பட்டு குடிப்பிறப்புடைய கல்வியறிவாளர் பலரது அபிப்பிராயப்படி ஆசாரியபிஷேகம் பெற்றவரே தேவமானுட பிதிர்காரியங்கட்கு ஆசாரியராகவிருந்து கிரியை நடத்துதல் கூடும். இது பெரிதும் நம் யாழ்ப்பாணத்துக் கையாண்டுவரப்படும் ஓர் செயலாகும். இற்றைக்குச் சில வருடங்கட்குமுன்னும் நம்யாழ்ப்பாணத்துப் பிராமணக் குருமாராயுள்ளார் ஆசாரியராகவேண்டில் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள தக்க ஆசாரியரால் பரீட்சிக்கப்பட்டு அபிஷேகிக்கப்பெற்றாலன்றி ஆசாரியராதல் கூடாததாயிருந்தது. அவ்விதம் அபிஷேகிக்கப்பெற்றுவந்த குருமாரை அழைத்து ஏதாவது கிரியைகள் செய்யவேண்டி நேரின் குறித்த தினத்திற்கு முன்னரே கிரியாகர்த்தர் அறிவொழுக்கங்களானிறைந்த முதியோருடன் சென்று ஆசாரியரை வழிபாடுசெய்து இன்ன தினத்தில் இன்ன கிரியையின்பொருட்டுத் தேவரீர் இன்ன இடத்திற்கு எழுந்தருளவேண்டுமென விண்ணப்பித்து அத்தினத்தில் தம் சுற்றமித்திரருடன் சென்று அவர்களைப் பல்லக்கு முதலானவைகளிலேற்றிப் பலவரிசைகளோடும் அழைத்துச் செல்வார்கள். இக்காலத்திலே ஆசாரியராக வேண்டின் தத்தஞ் சாதிக்குரிய ஒழுக்கத்தில் ஆயிரத்தில் ஒருகூறேனும் இல்லாதாரும், கல்வியறிவில்லாதிருப்பினும், தந்தை மூதாதை முதலியோர் செய்துவந்த கிரியைகள் வேறுசாரியர்பாற் சேரின் தம்வாய்க் கரிசி கிட்டாதெனத் தெண்ணி, தம் சிஷ்யர் வாயில் அரிசி போடப் பழகிக்கொண்டாற்போதுமென்று, தம் மொத்த ஆசிரியரைத்தேடி, அவராலபிஷேகிக்கப்பெற்று, தம்மொத்தார்பால் வருங் கிரியைகளைச் செய்துவரலாயினர். இன்னவரை ஒரு கிரியை செய்யும்பொழுது அவைதப்பற்றி யாதும் கேட்டின் க மேன் இதில் வந்தோமென விழிப்பதேயன்றி உத்தரமுரைப்பதொரு காரணமில்லை. கும்பத்திற்கு நூலேன் சுற்றவேண்டும்? மந்திரமேன் தரிக்கவேண்டும்? நீர் பூரிப்பதெற்றுக்கு? என்று இத்தன்மைய கேள்விகளைக் கேட்பின் இவைகளை உங்கட்குரைக்கக்கூடாதென்பர். தனிமையாயுபதேசித்தால் ஆலோசிக்கக் கேட்பர். மஞ்சட்பொடி முதலிய ஐந்துநிறத் தூள்களை எதன்பொருட்டு எடுப்பதென்பதும், அவ்வப்பூதாதிபதிகள் எவ்வெவரென்பதும், அவற்றைப் பஞ்சீகரணப் படுத்துமுறையும், அதன்கண் நிற்கும் ஆன்மநிலையும், மயாகத்தை போகங்களும் கிஞ்சித்து மறியாக் குருமாரெத்தனைபேர் அந்தியேட்டி செய்தலை நாம் பன்முறை கண்டிருக்கின்றோம். எல்லாச் செலவும் உம்மோடுதான் பத்துரூபாமாத்திரம் தருவோம், நாங்களும் ஐந்துபேர் சாப்பாட்டிற்கு வருவோம், எனது தகப்பனாது அந்தியேட்டியைச் சிறப்பாக நடாத்திவைக்கவேண்டுமென்று யாராவது கேட்பின், வண்டிற்கூலியை நீர் பொறுத்துக்கொள்ளுமென்று குரு கேட்பார். அப்படியானால் நீர் விடும், நாங்கள் வேறுகுருக்களிடம் போகப்போகிறோமென்று சொன்னவுடனே, நீரும் என்ன வேண்டுமென்று வந்துவிட்டீரே, உம்மோடு எதை நிறுத்திப்பார்ப்பது, கோழிக்கூவுக்கு வாருமென்று சொல்லி அவருக்குத் தாம்பூலம் முதலியன அளித்து உபசரித்தனுப்பிவிட்டு உடனே புறப்பட்டு வண்டிக்காரனுக்குச் சொல்லிவிட்டு, சந்தைக்குப் போய்க் காய்கறிசாமான் வாங்கிவந்து வைத்துவிட்டு, விறகும் கொதநிக் கட்டிவைப்பார். அதன்பின் முன்வந்த அந்தியேட்டிகளில் அசுசியடைந்தனவாய தேங்காய், நெல், வஸ்திரம் முதலிய பழைய பொருட்களைத் திரட்டி அவர்கள் வரவையும் எதிர்பார்த்து வந்தவுடன் வண்டியில் உட்காரச் செய்து தாமொருபக்கத் தொதுங்கியிருந்து அழைத்துச்சென்று கண்ணீரொழுகப் புகை முகந்தவர்க்குப் போசனாதிகாரியங்கட்கு வேண்டுவன அமைத்து வைத்துப் பின் அந்தியேட்டியையுஞ்செய்து, மேல் அன்னபானாதிகளை புதவித் திருப்தி கேட்டுப் பின்னர், தாம் சென்று தம்முடைய நியம நிஷ்டைகளை முடிப்பர். இவ்விதமான பரிபாலனத்தில் தக்க ஆசாரியரைக் காண்பதெப்படி! சமயவுண்மைகள் விளங்குவது எங்ஙனம்! மார்க்கந்தனைப் பெறுவதெவ்வாறு! ஐயையோ!! அவமானம்!! இதின் மிக்க இகழ்ச்சி பிறிதுண்டா! அமெரிக்கா இங்கிலந்து முதலிய அந்நிய தேசங்களிலிருந்துவந்து தங்கள்சமயத்தைப் பரப்பி பரிபாலிக்கின்ற குருமார்க்கும் சிஷர்களுக்குமுள்ள ஒழுக்கங்களையேனும் நம் சமயாசாரத்தை ஒதுக்கி ஒழுகுஞ் சைவசாகியத்தார் பார்த்து ஒழுகுதல் கூடாதா? இவர்கள் சமயபரிபாலனத்துக்காகச் செலவுசெய்யும் பணத்தொகைக்கு இலட்சம் மடங்கு பணத்தைச் சமயாசாரவிஷயமாக நம்மனோர் செலவுசெய்தும் நிந்தைக்குரிய வழியிலொழுகுவோமாயின் அதனினும் மிக்க பரிபவம் பிறிதுண்டா? இந்நிலைவரையிலும் தேவாலயகர்த்தாக்களிலேயே தங்கியிருக்கிறது. நம்மீழத் தலைநகராகிய கொழும்பிலுள்ள பிடகாகமபாடசாலையில் மைசூர் ஜப்பான் சீனமுதலிய இடங்களிலிருந்தும் புத்தசமயிகள் வந்து கற்று அரங்கேறி அபிடேகிக்கப்பெற்று ஆசாரியராய்ச் செல்லுதல் நமக்குப் பிரத்தியட்சமாகவும், நாமிதுவிஷயத்தில் பாராமுகமாயிருப்போமாயின் நஞ்சைவசமயம் தாழ்ந்த நிலையை யடைதற்கு நஞ்சமயத்தெதிரிகளாய மற்றைய மார்க்கத்தார் எற்றுக்கு; விவிலிய போதகாசிரியர்கள் பெங்களூரிற் சென்று கற்று அரங்கேறிவருதல் எவரானறியப்படாதது. நம்மீழத்துச் சைவசமயிகட்குத்தான் கழகம் வேண்டாதாயிற்று. என்செய்யலாம்! இருகால வர்த்தமானங்களையும் சிறிது சொன்னோம். எங்கள் பிரமஸ்ரீ சதாசிவக் குருக்கள் அவர்களாலுண்டாக்கிய சிவஞானோதய வித்தியாசாலையிற் கற்றுத் தேறி, தக்க மேதாவியர்கள் மத்தியில் அபிடேகிக்கப்பெற்றுச் செல்லும் குருமார் பண்டைக் காலத் தாசாரியர்க்குப்போல பலவரிசைகளும் பெற்று மேன்மையுடன் விளங்குவரென்பதும், அவர்களாற் செய்யப்படும் கிரியைகளில் தெய்வங்கள் சாந்நித்தியமாய் நின்று அருள்செய்யுமென்பதும், மானுடர் சகலமங்கலத்துடனும் வாழ்வாரென்பதும், பிதுரர் நற்கதியடைவரென்பதும் சொல்லவும் வேண்டுமோ? இதுகாறும் சிவஞான தான பரிபாலனத்தைப் பற்றி விளக்கினோம். இனி கழகபரிபாலனத்தைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

கழக பரிபாலனம்.

இதுகாலவரை ஆசாரியவகுப்பினர் ஒருங்குசேர்ந்து கற்றற்குரிய கல்லூரி ஒன்று சைவ சமயிகளால் இவ்வீழத்து எப்பாகத்தேனும் அமைக்கப்படாமையின், இப்போ கிடைத்திருக்கு மிக்கழகம் ஈழத்தின் பலபாகத்தும் பரவியிருக்கும் சைவ சமயிகளுக்கெல்லாம் விருந்தெனலாம். ஆதலால் நம்மீழநாட்டின் எவ்வெவ்விடங்களிலுமுள்ள கீர்த்திபெற்ற ஸ்தலங்களின் காரியதரிசிகளாயுள்ளார் தம்மாலியன்ற உதவி செய்தும், நந்தாய் நாடாகிய இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து வந்து வாணிகஞ்செய்து பொருளீட்டும் தனவைசியர் முதலானோர் தத்தமக்கேற்றவகையுதவியும், நம்மீழநாட்டிலிருந்து தேசாந்தரம் சென்று பொருளீட்டும் சமயாபிமான சிலர்கள் தத்தமக்கியைந்தவாறீந்தும், இங்குள்ள தனவந்தர்கள் ஏற்றபடி விலைக்குக் கொடுத்தும், ஏனோர் தானாது வேளாண்மை செய்தும், இராசசவாணர் முரசறைந்தீந்தும், வருவரேல் நஞ்சிவஞானோதய வித்தியாசாலை உலகெலாம் பரந்த அஞ்ஞான இருளை ஓட்டி மெய்யொளி பரப்புமென்பது சொல்லவும்வேண்டுமோ! இது விஷயத்தில் ஆடவர்களாகிய நாம் கரிசனையுடையோமாயிருப்போமென்பது தவறுடைத்து. தருமநெறியைக் கடைப்பிடித்தல் மாதர்க்கே முக்கியதர்மமாயிருக்கிறது. நஞ்சைவசமயம் புறச்சமயிகளாற் பாழடைந்த அக்காலத்துப் பாண்டிநாடெங்கும் விபூதியையும் பஞ்சாட்சரத்தையும் பரவச்செய்தவர் எங்கள் சமயமாதாவாகிய மங்கையர்க்கரசியாரன்றோ? திருஞானசம்பந்தப்பிள்ளையார் அங்கே எழுந்தருளப் பெற்றதும், பாண்டியராசனும் அவன் கீழ் வாழுங் குடிகளும் விபூதி தரித்துப் பஞ்சாட்சர செபஞ் செய்யப்பெற்றதும், அப்பாண்டிமாதேவியின் சமயபக்தியின் முதிர்ச்சியினாலன்றோ? கருணையுதிப்பது பெண்கள்பாலன்றி ஆடவர்பால் விரைந்தணுகாது. "பரிவுடையாளிற் றாய்நாள்" எனக் குமாரக்கடவுளும் தந்தை நான்வன்னது தாய் நான் எனப் பெண்பாலை விதந்தெடுத்தோதுதலின் பெண்களாயுள்ளார் அனைவரும் தாய் என்னுந் தகுதியுரிமையுடையராதலால் அவரே நஞ் சைவ சமயத்தில் பரிவுகொண்டாலன்றி மற்றவர்கள் கொள்ளும் பரிவாற்பயனென்னை? சிவபெருமானும் இரண்டு நாழிநெற்கொண்டு முப்பத்திரண்டறங்களையும் இயற்றும் வன்மை தந்தேவியாருக் குண்டெனத் திருவுளங்கொண்டு அதனையப் பெருமாட்டியார் பாலளித்து அத்தேவியார் வழியாக அறங்களைச் செய்விப்பாராயினர். அது "பெருமனைக் கிழத்திக்கு-செல்லிருநாழி நிறையக்கொடுத்தாங்கெண்ணான்கறமு மியற்றுதிநீயென வள்ளன்மைசெலுத்தும் ஒண்ணிதிச்செல்வ" என்னுந் திருவாக்கினாற் புலப்படும். (முப்பத்திரண்டறங்களுள் ஓதுவார்க்குணவளித்தலுமொன்று.) பெருவறுமையுட்பட்ட கிழத்தியானாலும் "யாவர்க்குமாமுண்ணும்போதொருகைப்பிடி" என்னும் வேதவாக்கியப்படி உண்ணும்போதெல்லாம் ஒருகைப்பிடியளியாது நாளொருகைப்பிடியேனும் அளித்தவரின் நூற்றுக்கணக்காக ஆயிரக்கணக்காகக் கொடுப்பவரை நாடி வருந்தவும் வேண்டுமோ? சமயாபிமான உத்தமிகள், எங்கள் பாண்டிமாதேவியார் திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருவாக்கினால் ஒரு பதிகத்தின் குலச்சிறைநாயனாரோடு புகழ்ந்து பாடப்பெற்ற பேறுபோலவும், சைவசமயிகளாகிய நாமெல்லாம் அப்பெருமாட்டியாருடைய புகழைச் சொல்லித் துதிக்கப்பெற்ற பேறுபோலவும் எங்கள் பிரமஸ்ரீ. சதாசிவக் குருக்கள் அவர்களால் சிவஞானோதய கழகவருமான இடாப்பின் நாமாட்டவணையிற் பதியப்பெறவும், அதனைப் பார்க்குங் கிழவர் பலராலும் போற்றப்படவும் முன் வருவாராயின், பாண்டிமாதேவியாரால் எப்படிச் சைவசமயம் பாண்டிநாடெங்கும் தழைத்தோங்கியதோ; அதுபோலச் சிவஞானோதய வித்தியாசாலை தழைத்தோங்குவதும், அதுவாயிலாகச் சைவசமய உண்மைகள் புலப்படுவதும் சத்தியம். சுப்பிரமணியப்பெருமான் தாயெனத் திருவாய்மலர்ந்த தாயீரே, பாண்டிமாதேவியாரைக் குலச்சிறைநாயனார் ஏவியதுபோல இற்றைக்கே நஞ்சதாசிவக் குருக்களை, உங்களுட் சமயாபிமானமுள்ள தந்தையரை, அன்றேல் நாயகரை அல்லது புத்திரரை அனுப்பி அழையுங்கள். அழைத்து நஞ்சைவத் தலையெடுக்கவந்த பெருவாழ்வே எனத் துதித்து உங்களாலியன்ற உதவி புரியுங்கள். அன்றேல் காகிதமூலமாக வணக்கத்துடனனுப்புங்கள். நீங்களே கருணாகரமென்பது சுப்பிரமணியப்பெருமானின் திருவாக்காயிருக்கின்றது. உங்கள் கருணையில்லாவழி இவ் வித்தியாசாலை எங்ஙனம் நடைபெறும். தாயில்லாப் பிள்ளைபோலாய்விடும். அறவறிந்தளித்தல் கிழத்தியர்க்குரித்தென்பது தமிழ்மறைக்கருத்து. இளையான்குடிமாறநாயனார் தம்மில்லில் பசித்தோர்போல் வந்த சிவபெருமானுக்கும் சிவனடியார்க்கன்னமளிக்க இயைந்தாரேனும் அவரான் முற்றியதியாது? அவர் மனையாட்டியாரன்றோ அவரது கீர்த்திக்கு முழுத்துணையாயிருந்தார்! அதுபோல உங்கள் நாயகர்களது கீர்த்திக்கும் நீங்களே துணையாவீர்களாயின இவ்வறத்தைச் செய்து பயன்பெற விரும்பிய நங்கிழவோராது எண்ணமும் பயன்றரும். எவ்வாற்றானெனினும் இப்பேரறம் நுந்தலைமேற் பொறுத்ததே. ஆதலாலிதனைச் செய்ய விரையுங்கள்! விரையுங்கள்!!

சிவஞானதானதாதாக்களே, சைவாலயபரிபாலகர்களே, இதுவிஷயத்திற் றயாராயிருங்கள். உங்களாலயங்களில் நடக்கும் நித்தியநைமித்திகச் செலவில் எத்துணையும் லோபஞ்செய்து இத்தருமத்தை வளருங்கள். தேவாலய தருமத்திலும் சிவஞானதானம் எத்துணை விசேடமென்பதை அறிந்தும் பின்னிடுவீராயின், ஆலயங்களை ஆன்மவீடேற்றத்துக்காக நடத்துகின்றீரென்பது அறிஞர்க்கொவ்வாததாம். சைவசமயிகள் ஆலயங்களை அமைத்து அவற்றை விழவெடுத்தல் ஆன்மவீடேற்றத்துக்காகவே யென்பது இச்சிவஞானோதய வித்தியாசாலை வாயிலாக உலகெலாம் நிலவ, நாமெலாம் பேரின்ப மடைய, இப்பேற்றையளிக்கவந்த தேசிகரவர்கள் பூர்ணாயுளையும், நோயிலா வாழ்வையும் மனஉறுதியையும் பொருட் பெருக்கத்தையும் புகழுரிமையையும் சிவபெருமானது அதிட்டானமாய் விளங்கும் பரிபாகத்தையும் பெற்று வாழ சிவபிரானை துதிக்கும் உரிமையும் எமக்குரியதே.

இங்ஙனம்,
கு. கனகசபை உபாத்தியாயர்,
சிறுப்பிட்டி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்,
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க,
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.